நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 47/2021
அரசு தரப்புக்காக அ. சா.2 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தில் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 2 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 31st day of October 2025.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 12.03 )

நான் தற்போது காட்டுமன்னார்கோவில் பாரதி தெருவில் வசித்து வருகிறேன். நான் பேக்கரியில் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் வீட்டிற்கு எதிர் வீட்டில் வசித்து வருகிறார். எனக்கும் எதிரிக்கும் எதிரி வளர்த்து வந்த நாய் எங்கள் வீட்டிற்கு அருகே வந்து சத்தம் போட்டதால் சிறு பிரச்சனை இருந்து வந்தது. கொரோனா காலத்திற்கு முன்பு ஒருநாள் மதியம் 02.00 மணிக்கு நான் வீட்டு வராண்டாவில் எனது மனைவியுடன் உட்கார்ந்திருந்தபோது கருப்பு கலர் முகமூடியுடன் வந்த 3 பேர் என்னை எதுவும் கேட்காமல் நேராக வந்து கத்தியால் வயிற்றில் இரண்டு இடத்திலும் முதுகின் அடிப்பக்கத்தில் குத்திவிட்டார்கள். எனது மனைவியையும் அவருடைய

வயிற்றில் ஒரு இடத்தில் குத்திவிட்டார்கள். குத்தியவுடன் அவர்கள் ஓடிவிட்டார்கள். அவர்களை அடையாளம் தெரியவில்லை. எதிரி ராஜேந்திரன் என்னையும் எனது மனைவியையும் கத்தியால் குத்தவில்லை. நாங்கள் சத்தம்போட்டவுடன் ராதாகிருஷ்ணன், பாலு மற்றும் அருகில் இருந்தவர்கள் வந்தார்கள். ஆம்புலன்ஸ் மூலமாக என்னையும் எனது மனைவியையும் காட்டுமன்னார்கோவில் அரசு மருத்துவமனைக்கு அழைத்துபோனார்கள். அங்கிருந்து சிதம்பரம் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றார்கள். அங்கிருந்து கோரிமேடு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். என்னை பரிசோதித்த மருத்துவரிடம் தெரியாத நபர் தான் குத்திவிட்டார் என்று சொன்னேன். காட்டுமன்னார்கோவில் அரசு மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்தார்கள். எனது அண்ணன் அன்பழகன் ஏற்கனவே எங்களுக்கும் எதிரிக்கும் பிரச்சனை இருந்ததால் எதிரி ராஜேந்திரன் மீது புகார் கொடுத்துவிட்டார். ஆனால் ராஜேந்திரன் எங்களிடம் எந்த பிரச்சனையும் செய்யவில்லை. எங்களை குத்தியவர்கள் முகமூடி அணிந்திருந்ததால் அடையாளம் தெரியவில்லை. கோரிமேடு மருத்துவமனைக்கு சென்று வந்தபிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கத்தி என்னை முகமூடி அணிந்தவர்கள் குத்தியதற்கு பயன்படுத்திய கத்தி அல்ல. அந்த கத்தி இதைவிட சிறியதாக இருந்தது. அந்த முகமூடி அணிந்த நபர்கள் அதை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

**அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முழுமையாக ஆதரவு அளிக்காத நிலையில் ஏற்கனவே போலீசார் விசாரணையில் விசாரித்த போது கூறியிருப்பதை மறுத்துள்ள நிலையில் இந்த சாட்சியிடம் அரசு தரப்பு வழக்கை எடுத்துரைத்து மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய இந்திய சாட்சி சட்டப்பிரிவு 154ன் கீழ் அனுமதி கோரினார். இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை–</u>

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அவ்வாறு என்னை விசாரித்தபோது நான் பெரியார் நகர் பாரதி வீதியில் என் குடும்பத்துடன்

வசித்து வருகின்றேன் என்றும் நான் காட்டுமன்னார்கோயில் பஸ் ஸ்டான்ட் எதிரில் உள்ள உள்ள மயூரா பேக்கரியில் வேலை செய்கிறேன் என்றும் எனக்கு திருமணமாகிவிட்டது என்றும் என் மனைவி பெயர் எழிலரசி என்றும் நாங்கள் 3 பேர் அண்ணன் தம்பிகள் என்றும் என் பெரிய அண்ணன் வேலழகன் அவர் ஹோமியோபதி டாக்டராக உள்ளார் என்றும் என் சின்ன அண்ணன் அன்பழகன் காட்டுமன்னார்கோயில் வழியாக ஓடும் DTK பஸ்ஸில் கண்டக்டராக வேலை செய்கிறார் என்றும் என் வீட்டின் எதிரில் வாடகைக்கு குடியிருக்கும் எதிரி ராஜேந்திரன் என்பவர் காட்டுமன்னார்கோயில் அரசு போக்குவரத்து கழகத்தில் டிரைவர் வேலை செய்து வருகிறார் என்றும் அவரது வீட்டு நாய் அடிக்கடி என் வீட்டுக்கு வந்து அசிங்கம் செய்துவிட்டு போகும் என்றும் அதை நான் தட்டி கேட்கும்போது எனக்கும், ராஜேந்திரனுக்கும் அடிக்கடி பிரச்சனை வந்ததுண்டு என்றும் எதிர்வீட்டு ராஜேந்திரனின் நாய் என் வீட்டிற்குள் ஏற்கனவே வந்ததை பற்றி நான் ராஜேந்திரனிடம் ஏன் உன் நாய் என் வீட்டுக்குள் வந்தது நாயை ஒழுங்கா வளர்க்க தெரியாத உனக்கு நாய் ஒரு கேடா என்று கோபமாக கேட்டேன் என்றும் அதற்கு ராஜேந்திரன் " என் நாய் வந்தா என்னடா" என்று கேட்க நான் உன் வீட்டு நாயை உன் வீட்டோடு வைத்துக்கொள் என்று சொல்லிவிட்டு போய்விட்டேன் என்றும் அதன்பிறகு 04.07.2020–ந் தேதி மதியம் சுமார் 02.30 மணிக்கு நான் பேக்கரியில் வேலை முடிந்து மதியம் சாப்பிட வீட்டிற்கு வந்தேன் என்றும் அப்போது நானும் என் மனைவியும் வீட்டிலிருக்கும்போது எதிர் வீட்டு ராஜேந்திரன் என் வீட்டு வாசலில் நின்று கொண்டு "ஏய் தேவிடியா பயலே", "செந்தில் பொட்ட பயலே வெளியே வாடா" என்று சத்தம் போட்டு கூப்பிட்டார் என்றும் நான் உடன் வீட்டிலிருந்து வெளியே சென்று ஏன் என்னை அசிங்கமா திட்டுற என்று கேட்டதற்கு எதிரி ராஜேந்திரன் உன்னாலதான்டா என் நாயை எங்க ஊருல கொண்டுபோய் விட்டுட்டேன். "தேவிடியா பயலே நீ இருந்தாதான்டா எனக்கு பிரச்சனை இத்தோடு ஒழிந்து போடா" என்று சொல்லிக்கொண்டே தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த ஸ்டீல் கத்தியை எடுத்து என் இடது மார்பு, இடது விலா, முதுகில் கத்தியால் மூன்று முறை குத்தி பலத்த குத்துக்காயம் ஏற்பட்டு ரத்தம் வெளியேறியதை பார்த்த என் மனைவி எழிலரசி ஓடி வந்து

தடுத்தபோது என் மனைவியை பார்த்து ராஜேந்திரன் கத்தியால் "நீயும் இத்தோடு ஒழிந்துபோடி தேவிடியா" அப்பதான் நான் நிம்மதியா இருக்க முடியும் என்று சொல்லிக்கொண்டே பலமாக என் மனைவியின் இடது பக்க வயிற்றில் குத்தி பலத்த ரத்த காயம் ஏற்படுத்தினார் என்றும் அதனால் என் மனைவியின் குடல் வெளியில் வந்தது என்றும் அதை நேரடியாக பார்த்த பார்த்த என் வீட்டிற்கு வந்த விருந்தாளிகள் நடுத்திட்டை சேர்ந்த தங்கசாமி மகன் ராதாகிருஷ்ணன் மற்றும் சர்வராஜன் பேட்டையை சேர்ந்த சம்பந்தம் மகன் பரிமேலழகன் மற்றும் தனலெஷ்மி மெடிக்கல் ஓனர் பாலசந்தரும் வந்து தடுத்தபோது "தேவிடியா பையா இன்னிக்கு தப்பிசிட்ட என்னைக்கா இருந்தாலும் என் கையாலதாண்டா உனக்கு சாவு" என்று கத்தியை காட்டி ராஜேந்திரன் மிரட்டிவிட்டு கத்தியுடன் தப்பியோடினார் என்றும் பலத்த ரத்த காயமடைந்த என்னையும், என் மனைவியையும் ஆம்புலன்ஸ் மூலம் காட்டுமன்னார்கோயில் அரசு மருத்துவமனையில் கொண்டு வந்து சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றும் அங்கு முதலுதவி சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்கு அண்ணாமலைநகர் RMMCH மருத்துவமனையில் காண்பித்து பின் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் இருவரையும் கொண்டு வந்து சேர்த்து அன்றைய தினமே எனக்கும் என் மனைவிக்கும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றும் என் அண்ணன் அன்பழகன்/அ.சா.1 மருத்துவமனையில் எங்களுக்கு உதவியாக உடனிருந்து, 05.07.2020–ந்தேதி அதிகாலை புதுச்சேரியிலிருந்து கிளம்பி காட்டுமன்னார்கோயில் காவல் நிலையம் வந்து என்னையும் என் மனைவியையும் கொலை வெறி தாக்குதல் நடத்திய ராஜேந்திரன் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டி எழுத்து மூலமான புகார் கொடுத்து புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து எதிரி ராஜேந்திரனை போலீசார் கைது செய்து சிறையிலடைத்தாக கேள்விபட்டேன். என்றும் அதன்பின்னர் நான் மருத்துவமனைவில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி வீட்டிலிருந்தபோது இன்று 20.07.2020 –ந்தேதி காட்டுமன்னார்கோயில் வட்ட காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரி எதிர் வீட்டில் வசிப்பதால் அவருடன் சமாதானமாக சென்று அதனால் எதிரிக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 12.22)

2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.